ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணு 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642.

திராவிடநாடு

மலர் 11. 9—11—52 இதழ் 10

வேலையில்லை!

கூலியில்லை!

பட்டினி!

குழந்தைகளை விற்கிறார்கள்

"என்ன காரணம் இதற்கு? நெசவாளர்களுக்குத் தேவையான நூல்தான், இப்போது கிடைக்கிறதே!"

நூல் கிடைக்கிறது. ஆனால் அதைக் கொண்டு தயாரிக்கப்படும் நெசவு ஆடைகளுக்கு 'மார்க்கெட்' இல்லை. கோடிக் கணக்கில் தேங்கிக்கிடக்கிறது. அதனால், நெசவாளர், வாழ முடியவில்லை.

"இது ஏன்? எப்படியேற்பட்டது, இங்கிலே? தயாரித்த ஆடைகள், விலை போகாததேன்?"

வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகவில்லை. போதிய போக்குவரத்து, வசதி இல்லை. ஏற்றுமதிக்கு இந்திய சர்க்கார் விதித்திருக்கும் சுங்க வரி அதிகம்.

"இதுமட்டும்தானா, காரணம், வேஷ்டி, சேலை, துண்டு, தேங்கிக் கிடப்பதற்கு?"

இந்திய சர்க்கார், மில்களுக்கு ஆசியும் ஆதரவும் தருகிறார்கள். வெளிநாடுகளுக்கு மில் துணிகளையே அனுப்புவதாக ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள். மில்களுக்கு அவர்கள் தருமளவு ஆதரவை, கைத்தறிமீது காட்டுவதில்லை.

"வெளிநாட்டில் 'மார்க்கெட்' இல்லையென்றால், உள்நாட்டிலாவது, கைத்தறித் துணி விலை போகிறதா? கிராக்கி உண்டா?"

இல்லை! இங்கும் மில்களே ஆதிக்கம் செலுத்துகின்றன. கைத்தறிக்கே, ஆயிரமாயிரம், ஆண்டுகளாக உரிமையுடன் இருந்துவந்த வேஷ்டி, சேலை முதலியவைகளையும் மில்களே உற்பத்தி செய்து, மார்க்கெட்டில் தள்ளுகின்றன.

"அதனால்......என்ன செய்ய வேண்டும்"

"கைத்தறிக்கென, வேஷ்டி, புடவைகள் தயாரிப்பை ஒதுக்கிட வேண்டும். மில்கள் இவைகளை உற்பத்திசெய்யக்கூடாது.

"மக்களுக்குத் தேவையான வேஷ்டி, புடவைகளை கைத்தறிக்காரர்கள் 'சப்ளை செய்ய முடியுமா?"

தாராளமாக முடியும். வேண்டிய அளவு தரமுடியும்.

"மில் துணிகளைவிட, கைத்தறித் துணிகளின் விலை அதிகமாயிருக்கிறதே? ஏழை எளியதுகள் சங்கடப்படுவார்களே!"

கைத்தறிக்குத்தரப்படும் நூலின் விலையைக் குறைத்தால், தறிகாரர்களும் மலிவான விலைக்கு வேஷ்டி சேலைகளை விற்கலாம்.

புலியும்—ஆடும்

"நூலின் விலைகளை எப்படிக் குறைப்பது?"

நம் நாட்டில் உற்பத்தியாகும் பருத்தியை வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள், இந்திய சர்க்கார். இப்படிச் செய்துவிட்டு வெளி நாட்டிலிருந்து, பருத்தி வரவழைக்கிறார்கள்! இதனால் விலை ஏறுகிறது.

"நூல் விலையைக் குறைக்க வேறெதாவது வழியுண்டா?"

குறைந்த விலைக்கு நெசவாளருக்கு நூல் கிடைப்பதுபற்றி ஒரு வார்த்தை. மில்களில் உற்பத்தியாகும் நூலை, ஆடைகள் நெய்யும் மில்களுக்குத் தரும் விலையிலேயே, நெசவாளர்க்குக் கிடைக்கும்படிச் செய்தால்போதும். விலை குறையும்.

*

கேள்விகள் கேட்பது டில்லி! பதில் தருவது சென்னை அமைச்சர் கிருஷ்ணாராவ்!! எங்கே தெரியுமா?—சென்னை சட்டசபையில். "இதென்னப்பா, விந்தை! சட்டசபையில் டில்லியா?" என்று ஆச்சரியப்படுவீர்கள். உண்மை, தோழர்களே, உண்மை! டில்லியை எதிரே நிறுத்திக்கொண்டு, கைத்தொழிலமைச்சர், விளக்கி விளக்கிப் பேசியுள்ளார். அமைச்சர் தந்த இந்த விளக்கங்கள், நமக்கல்ல — நாட்டுக்கும் அல்ல. கைத்தறியாளர் பிரச்னை குறித்து நாமும் அறிவோம்—நாடும் அறியும். எனவே இவ்வளவு விளக்கங்களையும் 'டில்லி'க்குத் தருகிறார், சென்னை அமைச்சர்.

"செச்சே! டில்லிக்குத் தெரிவிக்க, சட்டசபையிலேன் சங்கநாதம் செய்யவேண்டும்? அடிக்கடி அங்கே போகிறார்களே—சந்திக்கும்போது நேரில் கூறலாமே?" என்று கேட்பீர்கள். அவ்விதம் தெரிவிக்கும் வசதியும் வாய்ப்பும் நிறையப் பெற்றோர்தாம், சென்னை அமைச்சர்கள்! ஆயினும், சட்டசபையில் முழக்கமிட்டிருக்கிறார், கைத்தொழில் அமைச்சர். அங்கே அவ்விதம் பேசியதுக்குக் காரணம், நமக்காகவோ, நாட்டுக்காகவோ அல்ல என்பதை ஆச்சாரியார் விளக்குகிறார்:

"கைத்தறியாளர் சம்பந்தமாக தெற்கிலிருக்கும் மக்களுக்கு இவ்வித விளக்கம் தேவையில்லை. இந்தப் பிரச்னை சம்பந்தமாக எல்லோரும் அறிவார்கள். ஆனால், இது எவ்வளவு முக்கிய பிரச்னை என்பதை "மற்றப் பகுதிகளிலிருப்போர்" உணரவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிந்துகொண்டுள்ளேன். அதனாலேயே, சட்டசபையில் இதைக் குறித்துத் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறேன்"

கைத்தறியாளர் சம்பந்தமாக 'மற்றப் பகுதியினர்' அனுதாபம் காட்டவில்லையாம்! அதனால், சட்டசபையில் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறாராம்!!

"ஐயா! பிச்சை..."

"பட்டினி சாமி!"

"சாகிறோம் நாங்கள்!"

"துணி தேங்கிவிட்டது"

"வேறு வேலை தெரியாதே"

இவ்விதம், நெசவாளர்களிடமிருந்து எழும்பும் பரிதாபக்குரல்களை வலியுறுத்துகிறேன், என்கிறார் ஆச்சாரியார். 40-லட்சம் பேர் வாடுகிறார்கள், இங்கே! 10-லட்சம் குடும்பங்கள் கொந்தளிக்கின்றன! உழைத்தும் வாழமுடியாது, உலர்கிறார்கள்! பிச்சைக்காரர்களாய் விழியில் வழியும் நீரோடு, வீதிகளிலே அலைகிறார்கள்! — என்று, வர்ணிக்கிறார், முதலமைச்சர், நெசவாளர் நிலைகுறித்து. "குழந்தைகளையும் விற்கிறார்களாம்!" — என்று கூறுகிறார், கைத்தொழிலமைச்சர். கேளாக் காதினராகவும், 'அப்படியெல்லாம் இல்லை! யார் சொன்னது?' என்று மிரட்டுவோராகவும் இருந்த மந்திரிமார்கள், நாட்டின் நிலைமையை ஒப்புக்கொள்கிறார்கள். நலிகிறார்கள் 40-லட்சம்பேர், என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். நன்றி, அவர்களுக்கு. வளரவேண்டும் இந்த மனப்பண்பு. துன்பத்தால் தாக்குண்டோர் சிந்தும் கண்ணீரைக் காணுகிறது, சர்க்கார்! கண்ணீரைக் காண்பதும், அதைத் துடைத்து மக்கள்தம் கவலையைப் போக்குவதும், நல்ல சர்க்காருக்குரிய இலட்சணங்கள். நாடு நலியாது, என்பதற்கான அறிகுறிகள். ஆகவே, கைத்தறியாளர் குறைகளைக் கண்ணாரக்கண்டு கவலையுறும் அமைச்சர்களுக்காக அகமகிழ்கிறோம். ஆனால், அந்தக் குறைகளைக்கண்ட சர்க்கார், சட்டசபையினைக் கூட்டி சங்கநாதம் செய்வதேன்? சண்டப்பிரசண்டமென அமைச்சரும் ஆச்சாரியாரும் சொற்பொழிவாற்றுவது, எதற்காக?

"அமைச்சர் அவர்களே! கைத்தறியாளர் அவதிப்படுகின்றனர். பல ஊர்களிலிருந்து கால் நடையாகச் சென்னை சட்டசபை நோக்கி வந்துகொண்டுள்ளனர் — மறியல் செய்ய. எங்கும் இதே சூழ்நிலைதான்! அவர்களது துயரைத் தீர்க்கமாட்டீர்களா?" என்று, சட்டசபையில், தீப்பொறி பறக்க தென்னேட்டி விசுவநாதம் பேசலாம். புள்ளிவிபரங்களைக் காட்டி, கம்யூனிஸ்டுத் தோழர் நாகிரெட்டி முழக்கமிடலாம். அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள்! மக்களுடைய வறுமையினையும் வாழமுடியாத நிலைமையையும் சட்டசபையில் எடுத்துரைப்பதும்,'கவனிக்கிறோம்' என அமைச்சர்கள் பதிலளிப்பதையும் கண்டிருக்கிறோம் நாம். ஆனால்,

எதிர்க்கட்சியினரைப்போலவே மக்களது வறுமைக்காக, மக்களை ஆளும் சர்க்காரும் கண்ணீர்விடுவதைச் சென்னை சட்டசபையில்தான் காண்கிறோம். "திருடர்கள் அட்டகாசம்சகிக்கவில்லை, அரசே!" என்று, நாட்டுமக்கள் கூற, "ஆம்! ஐயோ என் செய்வோம்?" என்று, மக்களைப்பார்த்து மண்டலம் ஆளும் மன்னனும் அழத் தொடங்கினால், விந்தையான காட்சிதானே! 'உம் துயரங்கள் நீங்கவும், எப்படியாவது திருடர்களை ஒழித்துவிடுவோம்' என்று, சொல்வது பெருமைக்குரிய காரியம். அதை விட்டுவிட்டு 'ஐயோ! மன்னா' என்று வந்த மக்களைக் கட்டிக்கொண்டு, 'என்ன செய்வோம் நாம்!' என்று, அழுகுரல் எழுப்பினால், அவனை அரசன் என்று எவரே கூறுவர்! அதைப்போல, இருக்கிறது, சென்னை சர்க்காரின் நிலை.

கைத்தறியாளர் நிலை குறித்து— ஜீவானந்தம் பேசவேண்டியதைத் தொழிலமைச்சர் கூறுகிறார்! திருவொற்றியூர் [illegible] வேண்டியதைத் [illegible] சாரியார் [illegible] மக்களைப்போலவே, [illegible] விளக்கம் தருகிறார், அமைச்சர் வேதனையான நிலைக்கு. வியாசனம் செய்கிறார், ஆச்சாரியார், கைத்தறியாளர் நிலை குறித்து.

ஆட்சிபீடம் அமர்ந்திருக்கும் ஆச்சாரியாரின் சிந்தையில், நொந்து மடியும் நெசவாளரின் அவதி, தென்பட்டதற்காக அகமகிழ்கிறோம். ஆனால், சிந்தை நொந்தோருக்கு நன்மைகள் செய்துதரவேண்டிய அவர், வாடுவோர் நிலைமைகளைக் குறித்து "மற்றப் பகுதியினருக்கு" வியாக்யானம் செய்வதேன்? "வேதனைப்படுகிறார்கள் — விசாரப்படுகிறார்கள்—தொல்லைப்படுகிறார்கள் – வீதியில் உலவுகிறார்கள்." என்று ஆட்சியிலிருக்கும் அவரே வர்ணிப்பதன் அர்த்தம், என்ன? அவர் இம்மாகாண முதலமைச்சர்! சென்னை மாநிலத்தை— ஐந்துகோடி மக்களை—ஆள்கிறது, அவரது சர்க்கார்! அவரது மக்களில் 40 லட்சம்பேர், செத்துக்கொண்டிருக்கிறார்கள்-வாழவழியின்றி. அவர்களை வாழவைக்கவேண்டியவர், ஏன் அழவேண்டும்? அல்லது முழக்கமிடவேண்டும்? — சட்டசபையில் கைத்தறியாளர்களுக்காக வாதிட்ட முறையைக் காணும்போது, மிக மிகப் பாராட்டுகிறோம் அவரை, வாதத்திறமைக்காகவும், பிரச்னையைத் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கிறார், என்பதற்காக. ஆனால், ஏன், அவர் சட்டசபையில் சங்கநாதம் செய்ய வேண்டும்! சட்ட

(5ம் பக்கம் பார்க்க)

சி. என். ஏ.

கழக வீரர் பாண்டியன் படுகொலை செய்யப்பட்டதை அறிந்து பொதுச் செயலாளர் சி. என். ஏ. வடசென்னைத் தோழர்களான பி. ராமசாமி, திராவிடமணி ஆகியோரைச் சந்தித்து, கலந்து பேசினார்.

திராவிடநாடு

காஞ்சி] 9—11—52 [ஞாயிறு

பாண்டியன்-படுகொலை

அரசியலில் வளர்க்கப்பட்டுவரும் காட்டுமுறையின் விளைவாக நமது கண்மணிகளில் ஒருவரை இழந்துவிட்டோம். 1937-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப்போரில் ஈடுபட்ட நாள் முதல் நம்முடனிருந்து பணியாற்றியவரும், வண்ணாரப்பேட்டை தி. மு. க. உறுப்பினருமான தோழர் K. S. பாண்டியன் அவர்களை 28—10—52 இரவு, காங்கிரஸ் காட்டுமுறை, நம்மிடமிருந்து கொண்டு போய்விட்டது. இருட்டு நேரத்தில், வீட்டிற்குள்ளேயே மறைந்து நின்று, மிளகாய்ப் பொடியினைத் தூவி, கத்தியால் குத்திக் கொன்றுவிட்டனர். நாள் முழுதும் பாடுபட்டுவிட்டு, மனைவியையும் மகளையும் காண ஆசையோடு வீட்டு வாயிலில் அடி எடுத்து வைத்த தோழரைக் குருதிக் குளத்தில் மிதக்கக் கண்டனராம்—குடும்பத்தவர்கள். 'ஐயோ! ஐயோ!' என்று அலறி ஓடி வந்த அவரது அண்ணியாரையும், அருமை மகளையும், காலிகள் தாக்கி யிருக்கின்றனர், கத்தியால் குத்தி யிருக்கின்றனர். குருதி கொதிக்கும் இவ்வளவு காரியங்களும், தோழருடைய வீட்டு வாயிலிலேயே நடைபெற்றிருக்கிறதென்றால், பாதகம் புரிந்தோருக்குள்ள நெஞ்சுரமும், இவ்வளவு காரியத்தையும் துணிந்து செய்யத் தூண்டிய உள்ளப் பாங்கையும்பற்றி நாம் சிந்திக்காமலிருக்கமுடியாது. பொதுவாழ்வில், அரசியல் காரணங்களுக்காக, இதுபோன்ற கொலை நிகழ்ச்சிகள், காங்கிரசார் ஆட்சியில் சர்வ சாதாரணமாகி வருகின்றன. முன்பு உடையார்பாளையம் வேலாயுதம்—அண்மையில் மஜீது — இப்போது பாண்டியன்! இந்தக் கொடுமையை, நாம் எப்படித் தாங்கமுடியும்? அடியும், கத்தியும், அரிவாளும்தான் அரசியல் வாழ்வின் முட்டுக்கட்டைகள் என்றுவது, ஆட்சிப் பொறுப்பேற்றோர் அறிவித்துவிடட்டும். தொடர்ந்து நம்மீது பாய்வோர், காங்கிரஸ் கட்சியினரைச் சார்ந்தோராகவே இருக்கின்றனர். சாவு—சாதாரணமான சங்கதியல்ல. உலகத்தில் வாழப்பிறந்த ஒருவனை, அவன் ஒரு அரசியல் கொள்கைக்காக உழைக்கிறான் என்பதற்காக, இந்த உலகத்திலிருந்து ஓட்டிவிடுவது, என்கிற முறையைக் கையாண்டால், நாடு காடாக எவ்வளவு நேரம்பிடிக்கும்? இந்தக் காட்டுமுறையை வளர்ப்பது, மாபெரும் அரசியல் கட்சியென்று மார்தட்டப்பட்டு, அரசபீடம் ஏறியிருக்கும் கட்சியென்றால், இது என்ன நாடா அல்லது புலியும் நரியும் வாழும் காட்டுக்குகையா என்று நமக்கு விளங்கவில்லை. பாண்டியன், போய்விட்டார்! அவரது பணி, மக்கள் மன்றத்தில், எவ்வளவுதூரம் அவருக்குச் செல்வாக்கை வளர்த்திருக்கிறது என்பதை, மறுநாள் நடைபெற்ற பிரேத ஊர்வலத்தில் கண்டோம். வண்ணையம்பதியே கண்ணீர் சிந்திற்று! நமது இதயங்களைத் துடிக்கச் செய்துவிட்டு, குடும்பத்தினரை 'ஐயோ! ஐயோ!' என்று அலறச்செய்துவிட்டு, அருமை வீரரின் ஆவி பிரிந்துவிட்டது. ஆனால், அவரது ஆவியை, உடலிலிருந்து விரட்டிய அக்கிரமக்காரர்களை நோக்கி, மக்கள் சீறுகிறார்கள் — 'மாபாவிகள்' என்று தூற்றுகிறார்கள். மக்களின் சீற்றமும், நமது கண்ணீரும், நமது கண்மணியை நமக்குத் தந்துவிடாதே — என்று

எண்ணும்போதுதான், "அக்கிரமக்காரர்களே! என்ன காரியம் செய்தீர்கள்?" என்று வேக உணர்ச்சி ஏற்படுகிறது.

எதிர்க் கட்சிக்காரர்களை காட்டுமுறைகளால் ஒடுக்கவேண்டுமெனும் வெறி, கடந்த பொதுத் தேர்தலின் போதும், அண்மையில் நடைபெற்ற நகர சபைத் தேர்தலின்போதும், அந்தப் பகுதியில் அட்டகாசம் செய்திருக்கிறது—அதைக் குறிப்பிட்ட கட்சியினரே செய்துமிருக்கிறார்கள். அவ்வளவு நடைபெற்றிருந்தும் களைந்தெறியவில்லை, சர்க்கார். இதனால், 'எதையும் செய்யலாம்' என்று துணிந்து செய்யும் நிலை வளர்ந்து, இன்று, நமது பாண்டியனைக் கொண்டுபோய்விட்டது.

சில காலமாகவே, எதிர்க்கட்சியினரை ஒடுக்க, வெறித்தனத்தை நம்பி பலாத்காரமான காரியங்களில் காங்கிரஸ் கட்சியினர் ஈடுபட்டுவரும் தகவல்களைத் தந்துவந்துள்ளோம், நாம். பல இடங்களில் நமது தோழர்களே, தாக்குதலுக்கும் தடியடிக்கும் ஆளாகியிருக்கிறார்கள். பொதுத் தேர்தலில் காங்கிரஸ் முறியடிக்கப்பட்டதால் ஏற்பட்ட திகைப்பு, அந்த வட்டாரத்தில், காட்டுமிராண்டித்தனத்தை மூட்டிவிட்டிருக்கிறது.

இதற்குச் சாதகமாக, கட்சித் தலைவர்களின் நடவடிக்கையும் அமைந்துவிட்டது. தேர்தலில் தோல்விகண்டு, மைனாரிடியாகிவிட்ட காங்கிரஸ் கட்சி, ஜனநாயகத்தைக் கொலைசெய்து, ஆளத் தொடங்கிற்று. இது, காங்கிரசாருக்கு நெஞ்சுத் துணிவைத்தந்துவிட்டது—நமது சர்க்கார் இருக்கிறது, எனவே யாரையும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற துணிவு பிறந்துவிட்டது. இது நாட்டை நாசத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும்.

காட்டுமுறையின் மூலம், உயிர்களைக் கொத்துவதும், அதனால் அரசியல் எதிர்ப்பைத் தீர்த்துக் கொள்வதும், அதற்குச் சாதகமாக ஆட்சி அதிகாரப் போர்வையில் மறைய முயல்வதும், வளர்வது, ஆபத்து—மிக ஆபத்து.

இந்த ஆபத்துக்கு, அஸ்திவாரம் எழுப்பும் கும்பல், 'அகிம்சை'யின் பேரைச் சொல்லித் திரிவோரிடமே அதிகரிக்கிறது என்பதைக்கண்டும், காங்கிரஸ் தலைவர்களும், காங்கிரஸ் சர்க்காரும் கண்ணை மூடிக்கொண்டிருப்பது, கவலைப்படவேண்டிய காரியமாகும்.

நீதி நிலைநாட்டவேண்டும்—சட்டம் குனிந்துகொடுக்கக் கூடாது. சந்து பொந்துகளைக் கொண்டு குற்றம் புரிவோர், தப்பித்துக்கொள்ளும் நிலை ஏற்படவிடக்கூடாது. பொது வாழ்வு, பொறுப்பும் கண்ணியமும் நிரம்பிய புனிதத்தன்மையுடையது என்று நிலைநாட்டப்படவேண்டும். இந்த அரசியல் கண்ணியத்தைக் கூட, காந்தியாரைப் பலிகொடுத்த, காங்கிரஸ் கட்சியினர் உணரவில்லையென்றால், பிறந்த கல்லறைகள்தான், கேலி எழுப்பும்!

ஆட்சி அதிகாரம் இருக்கிறதெனும் எண்ணத்தால், அடியாட்கள் கூட்டமாக, காங்கிரஸ் கட்சி, வளர்வது எத்தனை நாட்களுக்குத்தான் நீடிக்க முடியும். கத்தியும் கம்பும் எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய வஸ்துக்கள்தானே?—இதையும் மறந்து விட்டு, மதோன்மத்த நிலையிலேயே, ஆளும் கட்சி செல்கிறதென்றால், விளைவு விபரீதமாகத்தான் ஆகும்.

ஒரு உயிர்! அதுவும் மக்களிடையே பணியாற்றிய உயிர்!!—அதனைக் கத்தி கொண்டு பிரித்துவிட்டனர். எண்ணினாலே, இதயம் குமுறுகிறது! பாண்டியன், எத்தகையசீயம்? அவரை இருட்டுள்ளம் கொண்ட எத்தர்கள், பிரித்து விட்டனரே நம்மைவிட்டு! இந்தக்கோரச் சம்பவங் கண்டு, உளங் கலங்கும், நண்பர்களுக்கெல்லாம் நாம் எவ்விதத் தேறுதலும் கூறுவதற்கு இயலவில்லை! கண்ணீர், எழுத்துக்களை மறைக்கிறது. தனது இரத்தத்தால், நமது இதயங்களிலும், கழகக் கொடியிலும். செந்நிறத்தைத் தடவி விட்டார், தோழர் பாண்டியன். அத்தகைய அருந்தகைவீரரை இழந்த பாண்டியனின் குடும்பத்தினருக்கும்—உற்றார் உறவினருக்கும், நமது மரியாதைகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாண்டியனின் படுகொலை கேட்டு பதறித்துடிக்கும் இயக்கத் தோழர்களை, பணிவன்போடு வேண்டிக் கொள்கிறோம், மனமுடைவதோ, ஆத்திரமடைவதோ வேண்டாம்! வேண்டாம்! என்று.

அரசியலில், நம் உயிரைக்குடிக்க எத்தனிக்கும், பாசிச வெறியர்களின், அரசியல் வாழ்வை, நமது அமைதியும் கண்ணியமும் சுக்குநூறாக்கிவிடும்—ஐயம் வேண்டாம்!

மறைந்த வீரர் பாண்டியனின் படுகொலையைக் கண்டித்தும், அவரது சேவையை விளக்கியும், நீதி கோரியும், தீர்மானங்கள் நிறைவேற்றுமாறு கிளைக்கழகத்தினரை வேண்டிக்கொள்ளுகிறோம். கொள்கைக்காக வாழ்ந்து, கொள்கைக்காக உயிரையும் இழந்த, அந்த அருமை வீரர் ஆற்றிய தொண்டுப்பாதையில், அவர் சிந்திய இரத்தத்தை நினைவில் கொண்டு, நாம் சென்றுகொண்டிருப்போம்! வாழ்க பாண்டியன் நாமம்!! ஒழிக அரசியல்வெறி!!

வில்லாளன் தந்தையார் மறைவு

நமது தோழர் தில்லை-வில்லாளன் அவர்களது தந்தையார், 5–11–52 அன்று தமது 72வது வயதில் காலமானார் என்கிற செய்தியைத் தோழர்களுக்கு வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

சில நாட்களாக, அவர் நோய் வாய்ப்பட்டிருந்ததை அறிந்த சி. என். ஏ. விருதுநகர் கூட்டத்துக்குச் சென்று, அங்கிருந்து சிதம்பரம் வந்து; வில்லாளன் தந்தையாரைச் சென்னைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்துவிட்டு சென்னை சென்றார்.

சென்னை ஸ்டான்லி மெடிகல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் போது, ஊர் திரும்பிடவேண்டும் என்று பெரியவர் வற்புறுத்தவே, மீண்டும் அவர் சிதம்பரம் கொண்டு போகப்பட்டு, அங்கு காலமானார். சாவின் கோரக் கரங்கள், அந்தப் பெரியவரைக் கொண்டுபோய்விட்டனவென்றாலும், அவர் நமது நண்பர்மீதும், நம்மீதும் வைத்திருந்த பாசத்தையும், அவருடன் உரையாடிய நேரங்களையும் நினைக்கும் போது, நம்மால் தாளமுடியாத துக்கம், மோதுகிறது.

நமக்கோர் நல்ல நண்பரையும், திராவிடத்துக்கோர் சிறந்த தொண்டரையும், தந்த அந்தப் பெரியவர், தனது பெயரை, மங்காமல் நிலைநிறுத்திக் கொண்டுவிட்டார்—தனது புதல்வர்கள் மூலம். எனினும், அவரது பிரிவை நினைக்கும் போது, துயரம் படருகிறது. நமக்கே இப்படியென்றால், நண்பர் வில்லாளனுக்கும் அவர்தம் சகோதரர்களுக்கும், அன்னையாருக்கும், குடும்பத்தாருக்கும் ஏற்பட்டிருக்கும் துயரம் அளவிட முடியாததாயிருக்கும். வாழ்க்கையின் மேடுபள்ளங்களை அறிந்த நண்பர் வில்லாளனுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

5-ம் பக்கத் தொடர்ச்சி

துக் கொல்லுமுன் புலி நக்கிக் கொடுக்கிறதே, அதைப் போன்றது"

புலி! ஆடு!! — நம்முடைய உவமானத்தை, 'ஞாபகத்தோடு' வெளியிட்டிருக்கிறார், அன்பர் ஆச்சாரியார். கஜத்துக்கு காலணா வைத்து உதவுவது, அன்பால் அல்ல! துரோக நினைவுடன்!!—என்று தெரிவிக்கிறார், இவர். இவ்வளவு கொடூர எண்ணங் கொண்ட வடநாட்டவரை புலிக்கு ஒப்பிடுகிறார்.

அந்தப்புலி, நம்மவர் வாழ்வினைச் சுரண்டுவதையும் விளக்குகிறார்.

சுரண்டுதலும் வியாபாரக் கொள்ளையுமே அந்தப்புலியின், நோக்கம் என்கிறார்.

அத்தகைய புலிக்கு டில்லி ஆதரவுதருகிறது—ஆகவே, டில்லியின் கண்களைத்திருப்ப பொதுஜன சக்தியைத் திரட்டுங்கள் — அதைக் கொண்டுபோய்க்காட்டி தெண்டனிடுகிறேன், என்கிறார். 'தீர்மானம்' செய்தே, டில்லி மூலவரைக்காண விரும்புகிறார்.

இவரும் டில்லியினரும் ஒரே கட்சியினர்—நண்பர்கள்.

ஆனால், இந்தப் பிரச்னையில் ஆச்சாரியாருக்கே 'அச்சமும் ஆலோசனை'யும் தேவைப் படுமளவுக்கு, இருக்கிறது.

இது, டில்லியின் வலிமையைக் காட்டுவதாகும். இத்தகைய புலியின் வாயிலிருந்து மீளத்தானே, நாம் 'திராவிடநாடு' கேட்கிறோம். இதை, உணர்ந்து கொள்ளும் நிலை, என்று வருமோ? புலியின் வாயிலிருந்து ஆடு விடுபடுமோ!

காஞ்சியில்
பொதுக்கூட்டம்
9-11-52 ஞாயிறு மாலை 6 மணிக்கு
இரட்டைமண்டபத்தருகில்
எ. பி. வெங்கடாசலம் தலைமையில்
இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ
பேசுவார்.

"வாளும், நீயும் எம்மை வாட்டிட முடியாது! வளைந்துகொடுக்கும் மாபல்ல, எமது; கைகளிலே விலங்கு மாட்டலாம்—ஆனால் இதயங்களை அடிமையாக்க எவராலும் இயலாது. சாவுதான் எம்மை வெல்லும்—இந்தச் சதிகாரர்கள் அல்ல. தோழீ! துவளாதே கமல மலர் போன்ற கண்களில் கனலை வரவழைப்போம்! காண்போம் நம் தாயகத்தை வீழ்த்தியவனை, தளராதே—தயாராக இரு"

"ஒன்றும் நேராது, உங்களுக்கு. எமது தலைவன், தையலாரிடம் வீரம் காட்டும் பேடியல்ல. மாவீரர் அவர்! மலை குலைந்தாலும் மனந் தளரார், மாவீரர். மண்டலமே, அசைந்தாடுகிறது, அவருக்கு!"

"மண்டலம் ஆடலாம்—ஆனால், எமது மனம் அவருக்கு அடிமையாகிவிடவில்லை. அறிந்து கொள்!"

"வெற்றி பெற்றிருக்கிறாரே, அம்மா?"

"வெற்றி பெறவில்லை—வெறியால் அடக்கி வந்திருக்கிறார். ஆறாயிரம் பேர், மாண்டனர்..."

"முப்பதினாயிரம் பேரைக் கைது செய்திருக்கிறார்—கட்டளைக்குக் கீழ்படியச் செய்திருக்கிறார், இதற்குப் பெயர் வெற்றியன்றி, வேறென்ன?"

"இல்லை! அவரது ஆயுதம் வெற்றி பெற்றிருக்கும். இருதயமல்ல!!"

"குருதி குடிக்கும் புலியல்ல எமது தலைவர்! கோழையாகி ஓடிவிடும் குறும்பாடுமல்ல. வீரம் அவரது மூச்சு! வெஞ்சமர் அவருக்கோர் விளையாட்டு!! வெற்றிபெறும் பேராசைக்காரர்—ஆனால் கருணை காட்டுவதில் சளைக்காதவர். போர்க்களத்திலே புலி! ஆனால் ராஜ்யம் ஆளும்போது அவர் ஓர் பசு!!"

* * *

"வீராதி வீரர்களே! உங்கள், கடமைக்கு என் நன்றி. போர்க்களத்திலே, பெற்ற வடுக்கள், நமது மாவீரத்துக்கு நாம் பெற்றுக்கொண்ட அடையாளங்கள். உலகம் உள்ளளவும் குன்றாத பெருமையை உங்கள் தலைவனுக்குத் தந்து விட்டீர்கள்! தலைவணங்குகிறேன், உமது தளராத இதயம், உலராத வீரம், குலையாத உளம் கண்டு. போரிலே வெற்றி கண்டுவிட்டோம்! புறமுதுகிடச் செய்தோம், எதிரிகளை!! அதோடு முடிந்துவிடவில்லை, நமது பணி. கிரேக்க மாவீரர்கள் போர்க்களத்திலே மட்டுமல்ல, அண்டினோரை ஆதரிப்பதிலும் பிறரைப் புறமுதுகிடச் செய்வர் என்று காட்டவேண்டிய சந்தர்ப்பம் வந்திருக்கிறது. முப்பதினாயிரம் பேர், நம்மால் வளைக்கப்பட்டுவிட்டனர். அவர்களது, புண்பட்ட உள்ளங்களை, நமது புன்னகையால் குளிப்பாட்டவேண்டும். துடிக்கும் அவர்தம் உள்ளங்களை, அன்பால், கவர வேண்டும். அழைத்துச் செல்லுங்கள் அவர்களை! நாரீமணிகளுக்கு, நல்லுபசாரம் நடத்துங்கள். போர் வீரர்களுக்கு வேண்டிய விடுதிகளைத் திறந்துவிடுங்கள். 'அலெக்சாண்டர், போரிலே மட்டுமல்ல புலி! அன்பிலும் அவனுக்கு இணையில்லை!' என்ற புகழுரையைப் பெற்றுத் தாருங்கள்."

* * *

"கம்பாஸ்பீ! என தருமைத் தோழீ! கண்களிலே வழியும்நீரைத் துடைத்துக் கொள். மறைந்து போன அண்ணனையும் மற்றையோரையும் நினைத்துச் சிந்தாதே, அம்மா! அவர்கள், தீபஸ் நகரத்தின் திருவிளக்குகளாகிவிட்டார்கள். வீரத்தால் புகழ்பெற்ற வெற்றிச் சீயங்களின் சகோதரிகள் நாம்—என்ற புகழை நமக்குத் தந்திருக்கிறார்கள். அவர்கள் கோழைகளாகிச் சாகவில்லை! கொக்கரித்து, வாள் சுழற்றி அமர்க்களத்திலே உலவி, அடங்கிவிட்டது அவர்தம் உயிர்! அந்த வீரச் சகோதரர்களை நினைத்து 'வாழ்க! வாழ்க!!' என்று பாடம்மா!"

காதல் கீதம்!

[அண்ணல்]

"அக்கா. திமோக்லீ! அயராது போரிட்டு மடிந்த ஆறாயிரம் வீரர்களை நினைத்து அழவில்லை, நான். ஆனால், அவ்வளவு உயிரையும் போக்கடித்து, அலெக்சாண்டர் பெற்ற வெற்றியென்ன? என்று நினைத்தேன். எவ்வளவு பெரிய கம்பீரமான உருவம் இருக்கிறது, அலெக்சாண்டருக்கு! காலடி தவழ காத்துக் கிடக்கும் சாம்ராஜ்யம் எவ்வளவு பெரியது! ஆனால், இந்த வெற்றியால், இம்மியளவாவது,நம்மவர் அன்பைப் பெற முடிந்ததா, அவனால்? அதை எண்ணினால், அவனுக்காக, இரக்கப்படுகிறேன், அக்கா!"

*

மாவீரன் அலெக்சாண்டர் மந்திரி பிரதானியர் புடைசூழ, போர்க்களச் செய்திகளைப் பூரிப்போடு அளவளாவிக் கொண்டிருக்கிறான்—தோழர்களோடு. 'ஆறாயிரம் பேர் செத்தனர்—முப்பதாயிரம்பேர் அடிமையாயினர்—தீபஸ் நகரை தீ விழுங்கச்செய்தேன். எனது வீரப்பாதையின் முதல் படி இது! இனி எங்கும் முரசு கொட்டுவேன். போரிலே மட்டுமல்ல—அடிமையானோரை ஆதரிப்பதிலும் தளராதவன் எனும் புகழைத் தேடிக்கொள்வேன்' என்று ஆனந்தத்தோடு, பேசுகிறான். "வாள் நீட்டி, பகைவர் தலைகளை உருட்டி, வீரச்சிந்து பாடுவது பெரிதல்ல. ஆனால், கைநீட்டி, பிறரை அணைத்து, ஆதரவளிப்பது பெரிய காரியம். மிரட்டலால், எவரையும் அடங்கச் செய்துவிடலாம். அன்புக்குக் கட்டுப்படுத்துவது, ஆகக்கூடிய காரியமல்ல. வாளால் இருதயத்தைப் பெறலாம்! ஆனால், அன்பால், அதனைப் பெறுவது எளிதல்ல. அதை நான், இனிச் சாதிப்பேன்!" என்று பெருமிதத்தோடு பேசுகிறான். அந்த நேரத்திலேதான், விரோதிகளால் பிடிபட்டோமே எனும் விரக்தியோடு, ஏதன்ஸ் நகர மாளிகையொன்றிலே, தீபஸ் நகர அழகிகளின் அரசியாம் கம்பாஸ்பீ, தனது தோழியுடன், கடைசியில் தந்துள்ளதுபோல, இவனுக்காகப்பரிதாபப்பட்டுக்கொண்டிருந்தாள். மாவீரன், அலெக்சாண்டர்!—ஆனால், அவனைக் கண்டதும் மயங்கவேண்டிய பெண்மணி, அவன் தனது மக்களைத் தோற்கடித்த செயல்களை நினைத்து, பரிதாபப்பட்டுக்கொண்டிருந்தாள். "கிரேக்க மாவீரன்! மாசிடோனின் மாணிக்கம்!!—அவன், அகில உலகையும் அடக்கிவிடலாம். ஆனால், எம் இதயத்தைப் பெற்றுக்கொள்ள அருகதையற்றவனாகிவிட்டான்." என்று, வேதனையோடு, சொல்லிக் கொண்டிருந்தாள். வெற்றிமேல் வெற்றி பெற்ற வீரனோ, தோழர்களிடம் உரையாடியபின்பு, உயிர்த் தோழன் ஒருவனுடன், உலவக் கிளம்பினான்! கைதிகளின் விடுதிகளைப் பார்வையிட்டுக்கொண்டே வரும்போது, கூறினான், "ஹெபாஸ்டியன்! தந்தையின் கம்பீரம், கம்பாஸ்பீயிடம் இருக்கிறதல்லவா?"

"ஆமாம்!"

"அத்தகைய அழகியை, நான் எங்குமே கண்டதில்லை"

'காண்பதற்கு நமக்கு நேரம் ஏது, பிரபு?"

"காதலும் வீரனும், விரோதிகள் என்பது உன் எண்ணமா?"

"வாள் சுழற்றவும், வந்தெதிர்ப் போரைத் தாக்கவும் அறிவேன். இது குறித்து, ஏதும், தெரியேன்"

"உயிர்த் தோழா! நான் உளமாரக் காதலிக்கிறேன் அவளை. மாசிடோனிய மன்னன், காதலிக்கிறான் அவளை! அவளது அழகு முகம், என்னை அடிமையாக்குகிறது...... ஏன் தலையைக் கவிழ்த்துக்கொண்டாய் ஹெபாஸ்டியன்? தகாதவார்த்தைகள் இவையென்று தயக்கமா, பதில் பேச?"

"நான் கிரேக்க வீரன்—தங்களது உயிர்த் தோழன்"

"அப்படியென்றால்...?'!

"வீராதி வீரன், ஒரு வேல் விழிக்கு அடிமையாவதா? மாசிடோனிய மன்னன், அடிமையான மங்கைக்காக உருகுவதா? உலகத்தையே நிலைகலக்கும் ஆற்றல் மிக்க நீர், ஒரு பெண்ணுக்காக சித்தம் குலைவதா! கைகளில் ஈட்டியும் கேடயமும் ஏந்தும் [illegible] காரிகையின் முகத்தை ஏந்தத் துடிப்பதா! முரசு முழக்கமும், சங்கநாதமும், புன்னகைக்கும் புல்லாங்குழலுக்கும் இரையாவதா? 'வெட்டு' 'அடி' 'விடாதே' என்று கட்டளையிட்ட தங்கள் உதடுகள் 'கண்ணே' 'மணியே' 'மானே' 'தேனே' என்று உச்சரிப்பதா! அலெக்சாண்டர் — வீழ்த்தமுடியாத உன் கண்களை, இரண்டு விழிகள் வீழ்த்திவிடுவதா! வெட்கம்—வெட்கம். மாவீரா! நீரோ, கூறுகிறீர், இதனை. களம்போகும் நேரம் இது! காதல் விளையாடச்செல்கிறேன், என்கிறீர்!! கைபிடிக்கக் காத்திருக்கும் அரசிளங்குமரிகள் ஆயிரமாயிரம் இருக்க, 'கைதிப் பெண்ணொருத்தி என்னைக் கவர்ந்தாள்' என்கிறீர். அழகியாகயிருக்கலாம் அவள். ஆனால் அவளது உள்ளம்? வெள்ளை உடலும் கறுத்த இதயமுமாகயிருந்துவிட்டால்! அழகு, களாக்காய் போன்றது—பழுக்காதபோது சிவப்பாகயிருக்கும்; கண்ணைக் கவரும். ஆனால் பழுத்தபின்? —இது அறியாதவரா நீர்! அடிமையின் மீது காதல்கொண்டேன் என்கிறீரே! தகுமா, இது? அழகு என்னை அடிமையாக்குகிறது என்று சொல்கிறீரே! அழகைப்பற்றி அறியாதவரா தாங்கள்? வெள்ளைத் தோல் கொண்ட பூனையிடம் நல்ல இருதயம் இருக்கிறதா? பளபளப்புக்காட்டும் பாம்பிடம் பாசம் காட்டுவோர் உண்டோ? அழகுள்ள பெண்கள், ஆபத்தானவர்கள்! மறந்துவிடாதீர்—மன்னன் அலெக்சாண்டர் கட்டிலறைக்கு அல்ல காவலன் — மாபெரும் மண்டலத்துக்கு. அவன் கண்காட்டிய வழி பாயக்காத்திருக்கும் வீரர்கள் ஆயிரமாயிரம்! அவன், அழகியொருத்தியின் கண்ணுக்கு அடிமையாகிடச் சகியேன் நான்?"

"நண்பா! 'மாவீரா! மாவீரா!!' என்றழைத்து, 'மங்கைக்கோ நீ அடிமையாவது?' என்று கேட்கிறாய். கோபத்தை விடுத்துக் கூறுவதைக்கேள். இதயப்புயலை, எவராலும் அடக்கமுடியாது! மன்னனின் ஆசைகள், மக்களது ஆசைகளைவிட உயர்ந்தது என்பதா உன் எண்ணம்? மன்னனும் மனிதன் தானே!"

"[illegible] கம்!"

"அதனும்....."

"அந்த [illegible] யக் கடாது!"

"இதயப்புயலை [illegible] முடியாதே, ஹெபா[illegible]!"

"சரி......[illegible] கொள்கிறேன். [illegible] குகிறீரே! [illegible] காதல் உண்டோ!"

"ஏன்? நான் மன்[illegible]!"

"மன்னன்தான்—[illegible]. ஆனால், அந்த [illegible], அல்ல மாவீரா, வீரத்தால் வெற்றி கொள்ள?"

"அலெக்சாண்டரால, முடியாது!"

"அவரும் ஒரு மனிதர்தானே—உங்கள் சித்தாந்தப்படி"

"நான் அவளுக்கு அதிபதி—அவள் என் அடிமை."

"அதிகாரத்துக்கு அன்புக் கல்ல!"

இவ்விதம், இருவருக்குமிடையே, புயலென எழும்பி, தென்றலென ஓய்ந்தது, உரையாடல். ஆனால், கம்பாஸ்பீயோ, தனது மாளிகையிலே தோழியுடன் சோக நினைவுகளை உதிர்த்துக்கொண்டிருந்தாள்—எவ்வித காதல் பேச்சுமின்றி.

*

"சிறந்த ஓவியன் இவன். பெயர் அபெல்லஸ். கண்டதைச் சித்திரமாக்கும் வல்லமை படைத்தவன். இவனைக் கொண்டு போங்கள்!" என்று, தம்மிடம் அழைத்து வரப்பட்ட ஓவியனை, அறிமுகப்படுத்தினான், [illegible] அந்த [illegible] தான்.

"அபெல்லஸ்!"

"பிரபு!"

"அழகுக்கு உயிரூட்டும் அற்புதன், நீ! உனக்கு அருமையான பணிதரப் போகிறேன். [illegible] யால் தீட்டப்பட்ட அழகியொருத்தியைச் [illegible] நீ உயிரூட்ட வேண்டும்"

*

மாவீரனின் மனதைக் கவர்ந்த மங்கைமுன், ஓவியன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான், கம்பாஸ்பீயிடம், அலெக்சாண்டரின் கட்டளை, நீட்டப்பட்டது, அவனும் தயாரானான்.

"அம்மா! உங்கள் முகத்துக்கு ஒப்பிட நிறமில்லையே என்னிடம்!"

"ஓவியரே! உமது கைத்திறனைக் காட்டவே, இங்கு வந்தீர்—நாவன்மையைக்காட்டுவதல்ல! [illegible] கம் இருக்கட்டும்"

இவ்விதம், அவர்கள் சந்திப்பு துவங்கிற்று. அது முதல், அனுதினமும், ஓவியனின் வேலை, நடைபெறலாயிற்று.

"அம்மா! உங்கள் [illegible] என்னால் இயலாது"

"ஏன், ஓவியரே?"

"உற்றுப் பார்க்கும்போது என் கண்களைக் [illegible]"

நல்ல உள்ளம்
[illegible]
[illegible] 6.
கிடைக்குமிடம்:
[illegible]
[illegible] (ம)

"அப்படியானல், கண்ணற்ற ஓவியமாக்கிவிடுமே, என் உருவை!"

"இதற்குமுன், தங்கள் சித்திரத்தை வரைந்துகொள்ள, யாராவது முயன்றதுண்டா?"

"இல்லை! உமக்குத்தான் கிடைத்திருக்கிறது"

இவ்விதம், மாவீரனின் உளம் கவர்ந்த நங்கைக்கும், சாதாரண ஓவியனுக்குமிடையே உரையாடல்கள் நடைபெறலாயின. அலெக்சாண்டர் வருவான்—அழகியின் ஓவியத்தைக் காண்பான்; பெருமூச்சோடு சென்றுவிடுவான். ஒரு நாள்...

"இதென்ன சிலை, அபெல்லஸ்?"

"வீனஸ் உருவம் அம்மா, அது! காதலுக்குக் கடவுள்"

"என்ன? காதலுக்கும் கடவுளா!"

"மனிதர் இதயத்தில் காதல் பாணம் போடும் கடவுளம்மா!"

"அதன் அனுக்கிரகம் பெறும் வழி என்ன? துதித்தா அல்லது பூசையிட்டா அல்லது பலி தந்தா? எவ்விதம் ஓவியரே!'

"மூன்று வழிகளிலும்தான், அம்மா!"

"எப்படித் துதிப்பது?"

"சலனமில்லாத உறுதியுடன்!"

"பலியிடுவது, எதனை?"

"இதயம் வழங்கும் பெருமூச்சுகளை!"

"பூஜையிடுதல்...?"

"அமைதியான முத்தங்கள் மூலம்"

*

அலெக்சாண்டர், கம்பாஸ்பியின் அழகில் மயங்கி இருப்பது கேட்ட, வீரத் தளபதிகள் மனந் துவண்டனர். வெற்றி காண வேண்டிய நாடுகள் எத்தனை யெத்தனை உள்ளன! இந்த நேரத்தில் வீண் பொழுது போக்குகிறாரே! — என்று கலங்கினர். சஞ்சலமும் போர்த் தாகமும் கொண்டிருந்த கிரேக்கத் தளபதிகளை நோக்கி, "தளபதிகளே! தயாராயிருங்கள்; பாரசீகம் நோக்கிப் பாயவேண்டி யிருக்கும்" என்றான், ஓர்நாள். மன்னனின் வார்த்தை கேட்ட தளபதிகள் சோர்வுற்றனர்—"பாயவேண்டியிருக்கும் என்கிறாரே பாயுங்கள், என்று கூறாமல்" எனும் எண்ணத்தால். "கட்டளையிடுங்கள் மன்னா! தொடர்ந்து கட்டளையிட வேண்டும் என்பதே எமது ஆசை" என்றனர், அந்த வீரத் தளபதிகள். அனைவரும் சென்றதும், அருகே அழைத்தான், உயிர்த் தோழன் ஹெபாஸ்டியனை.

"தோழா! ஓவியன், அவள் உருவைச் சித்தரித்திருப்பானா?"

"மாவீரரே! ஏனிந்த மனக்குழப்பம்? புரவிகள் சோர்ந்து கிடக்கின்றன! வீரர்கள், தூங்கிக் கிடக்கும் வாட்களைச் சோகத்தோடு பார்க்கின்றனர்! பாரசீகம், பயப்படவில்லை நமக்கு. எகிப்து பூமி, இறுமாந்து கிடக்கிறது. தாங்களோ, காதல் பேசுகிறீர்கள், காதல்! தங்கள் காலடியில் நாடுகளைப் பணியவைக்கக் காத்திருக்கிறோம், நாங்கள். உலகத்தை ஏந்தவேண்டிய நேரம் இது! ஒரு பெண்ணுக்காகச் சிந்தையைச் செலவிடாதீர்கள்!!"—இவ்விதம் குமுறினான் உயிர்த் தோழன். அலெக்சாண்டரோ, 'கோவ்வை இதழாளைக் கண்டு வரலாம், வா!' என்று அழைத்தான், அவனை. இருவரும் ஓவியன் மாளிகைக்குச் சென்றனர். ஒய்யாரி அமர்ந்திருந்தாள், ஓவியன்முன்! சித்திரத்தைத் தீட்டிக்கொண்டிருந்த அபெல்லஸ், மன்னனைக் கண்டதும், திடுக்கிட்டு எழுந்தான்.

"கம்பாஸ்பி! உனது அழகு, ஓவியன் பெயரை, உயர்த்துமல்லவா?"

"பயந்துகொண்டே சித்தரிக்கிறார், என் உருவை!"

"வர்ணங்களுக்கு அகப்படாத அழகுருவை வர்ணங்களால் தீட்டவாமுடியும்—அபெல்லஸ்!"

"வர்ணங்கள் பேசாது — அசையாது, மன்னா!"

"ஓவியம் துவங்கும்போது முதலில் எதை நீ, எழுதுவாய்?"

"முகத்திலிருந்து!"

"கண்களே, ஓவியத்துக்கு உயிர். அவைகளைத்தான் நான் தீட்டுவேன்!"

"நீங்கள் அரசர்! நான் ஓவியன்!"

"அப்படி யென்றால்......"

"தாங்கள் எப்படி வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால், ஓவியன் முகத்தைத்தான் எழுதவேண்டும்"

அலெக்சாண்டர், ஓவியக் கூடம் விட்டு, எழுந்து சென்றான் — உள்ளத்தில் சந்தேகத்தோடு. கம்பாஸ்பியும், தனது மாளிகை சென்றாள். தனித்துவிடப்பட்ட அபெல்லஸ், ஓவியத்தின் மீது கண்களைப் பதித்தான். "ஓவியமே! என் மனதைக் கொள்ளை கொண்ட ஓவியமே!!" என்று வாடலானான். மாளிகை சென்ற மங்கையும் மனோவியாகூலம் கொண்டாள். "மாவீரன் அலெக்சாண்டர், என மனதைப் பெற அலைகிறான். ஆனால், சாதாரண ஓவியன் என் இதயத்தில் புகுந்து விட்டான். தவிக்கிறான் மாவீரன், என்னைப் பெற! ஆனால்—என்னைக் கவர்ந்துவிட்டான், ஓவியன். என்ன செய்வது? காதல் ஒரு தீ! அது எங்கும் பற்றிக்கொள்ளும். அதற்கு நான் ஆளாகிவிட்டேன்! உலகம் கலக்கும் உத்தமனை, சித்ரவதைக்காளாக்கப் போகிறேன்!!", என்று சிந்தைநொந்துகொண்டாள். காதல் ஒரு புறம்! கட்டழகும் மாவீரமும் தாங்கிய மன்னன் மற்றோர் புறம்!!—இந்த மன வியாதிக்கு ஆளான மங்கை ஓவியம், சின்னாட்களில், தீட்டப்பட்டு முடிந்தது. காதலைப் பெறத் துடித்தான், அபெல்லஸ். ஓவியத்தை, அவள் முன்வைத்தான்.

"ஓவியம், என் உயிரைக் கவர்ந்துவிட்டது, அம்மா!"

"தவறிழைக்கிறாய், அபெல்லஸ்! தலைபோய் விடும், அலெக்சாண்டருக்குத் தெரிந்தால்"

"ஏன்?"

"அலெக்சாண்டர் விரும்பும் ஓவியம், இது!"

"காதலிப்பது, துரோகமல்ல என்று கூறுவேன் அவரிடம்!"

இவ்விதம், ஓவியன் தன் உள்ளத்தைத் திறந்து காட்டினான். உறுதியோடு பேசிய கம்பாஸ்பி, உள்ளம் நொந்தாள்! "ஓ, அபெல்லஸ்! உன் காதல், இதயத்திலிருந்து வருகிறது—அலெக்சாண்டரோ வாயால் வர்ணிக்கிறான். மன்னர்களின் காதல், காற்றடிக்கும் திசையெல்லாம் திரும்பும்! இலைகளைத் தழுவும்—மரங்களைப் பெயர்க்கும். ஆனால், ஓவியனின் காதல், உலராதே என்றும்" என்று சிந்தித்தாள். விரகதாபத்தால் இருவரும் வேதனைக் காளாகிக்கொண்டிருந்த நேரத்தில், மன்னன் அலெக்சாண்டர், உயிர்த் தோழனுடன், கம்பாஸ்பியைப்பற்றி, கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். ஓவியக்கூடத்திலிருந்து வந்ததுமுதல், ஓவியன்மீது ஐயம் கொண்டான்! ஹெபாஸ்டியனே, "காதலின் கண்களுக்குக் கண்டதெல்லாம் சந்தேகம்தான்" என்றான். "அதை இன்று பரிசோதித்துவிடுகிறேன்" என்று கூறியவண்ணம், அபெல்லெசுக்கு, ஆள் விடுத்தான். அவன் வந்ததும், அவனுடன் அலெக்சாண்டர் உரையாடிக் கொண்டிருந்தான். அப்போது, ஓர் கூக்குரல்! "ஐயோ, தீ! தீ!! அபெல்லஸ் உன் ஓவியக்கூடத்தில் தீ!" என்று யாரோ அலறினர். திடுக்கிட்டான், ஓவியன்! "கம்பாஸ்பி! கம்பாஸ்பியின் ஓவியம் போய்விட்டதே!!" என்று, கதறி ஓடத் தலைப்பட்டான். அவசரத்தால் நிலை கலங்கிய அபெல்லஸ், எவ்விதம் அறிவான், அலெக்சாண்டர், அவனுள்ளத்தை அறியச் செய்த சிறு தந்திரம்தான் அது, என்பதை? ஆகவே, துடித்தான். ஆனால், அலெக்சாண்டரோ அவனைத் தடுத்து நிறுத்தி, "பதறாதே, அபெல்லஸ்! ஓவியக்கூடத்தில் அல்ல, தீ; உனது இதயத்தில்தான். இவ்வளவு துடித்தாயே? உனக்கு அவள்மீது காதலோ?"

"இல்லை மன்னா இல்லை! ஓவியனுக்கு அவன் சிருஷ்டிமீதுதான் உயிர். ஆகவே, துடித்துப் போனேன்"

"வர்ணஜாலம் எனக்குத் தெரியாது. ஆனால் வார்த்தைகளின் ஜாலம் அறிவேன். வெட்கப்படாதே! விஷயத்தைச் சொல்! என் அடிமையிடம் உனக்கு காதல் தானே? மௌனம் ஏன்? காதலிப்பது, தவறல்ல! காதலே, மனிதனின் சுரங்கம்! காதல்வேண்டும், அதிலும் ஓவியனாகிய உனக்கு வேண்டும்" என்று, பேசி, அவனுள்ளத்தை அறிய முயன்றான். அதே நேரத்தில் அழகி கம்பாஸ்பியையும் அழைத்துவரச் சொன்னான். "கம்பாஸ்பியை ஓவியன விரும்பலாம், காதலிப்பது தவறல்ல! ஆனால், அவள் அவனைக் காதலிக்கவேண்டுமே? ஒருக்காலும் சம்மதியாள். உலகம் ஆளும் நான், அவள்மீது மையல் கொண்டிருப்பதை அறிவாள். ஆகவே, அவளைக் கேட்கவேண்டும்! அவள் வாயாலேயே அவனுக்குப் பதில்தந்துவிடவேண்டும். இல்லையானால், அவமானம் என்னைச்சூழும். அதற்கு என்னை ஆளாக்கிக் கொள்ளமாட்டேன்!" என்று, உயிர்த் தோழனிடம், மெள்ள உரைத்தான். அதன்படி, அவளும் வந்தாள்.

"கம்பாஸ்பி! அபெல்லெஸ் உன்னைக் காதலிக்கிறானாம்"

"மன்னராகிய தாங்களா, இதைச் சொல்கிறீர்கள்?"

"சிறந்த ஓவியன் அவன்! திறமை மிக்கவன். அவனோடு நீ வாழ்வது, ஆனந்தமாயிருக்கும். சம்மதம் தானே, உனக்கு?"

"மன்னர் ஆக்ஞையிட்டால், மங்கை நான் பணிந்துதானே ஆகவேண்டும்"

இந்தப் பதில், அலெக்சாண்டரைத் திடுக்கிடச் செய்தது. திகைத்தான். திசை மாறுவது தென்பட்டது, அவனுக்கு.

"அப்படியில்லை, கம்பாஸ்பி! 'காதலிப்பாய் அவனை' என்று நான் கட்டளையிடமுடியுமா? கட்டளைக்கு அகப்படுவதா காதல்!"

"இல்லை! ஆனால், அடிமை நான். தங்கள் ஆக்ஞைக்கு அடிபணியத் தானேவேண்டும்?"

"நீ, இவனைத் திருமணம் செய்துகொள்கிறாயா?—'இல்லை' யென்றால் நீங்களிருவரும் ஒன்றாக வேண்டுமென்று கட்டாயப்படுத்தமாட்டேன்..."

"மன்னியுங்கள் மன்னா! நான் அபெல்லசைக் காதலிக்கிறேன்"

மாவீரன் மருண்டான்! ஹெபாஸ்டியன் களித்தான்! ஒரு விநாடி, இருள்பரவிற்று, அலெக்சாண்டர் முகத்தில். சாமர்த்தியமாக சமாளித்துக் கொண்டான்.

"ஓவியா! உள்ளத்தைக் காட்டிவிட்டாள்—அவள். நீ மட்டும் ஊமையாயிருக்கிறாயே? கன்னிப் பெண் உன்னைக் காதலிக்கிறாள்! நீ மட்டும் மறுக்கலாமோ?"

"மறுக்கவில்லை மாவீரா! அவளே என் உயிர்!!"

இருவரையும் ஒருவராக்கினான், மாவீரன். விரக்தியோடு, கூறினான்.

"அலெக்சாண்டர் நாடுகளை முறியடிக்கலாம்—ஆனால் மனித ஆசைகளை ஜெயிக்க முடியாது. காதல் ஒரு பனித்துளி! அது, பசும் புல்லிலும் வீழும், பளிங்குமாமண்டபத்திலும் சிந்தும். ஓவியனே, உன் அழகியோடு சென்று வாழ்க! உயிரோவியத்தை அழைத்துச் செல்லும் நீ, நீ தீட்டிய உயிரில்லா ஓவியத்தை என்னிடம் தந்துபோ!!" என்றான். கம்பாஸ்பி, மாவீரனைப் பார்த்தாள். "சென்றுவா, அம்மா!" என்று, சோகத்தை மறைத்து, விடைதந்தான். வீரர்கள், இந்தக் காட்சியைக் கண்டனர்! உயிர்த்தோழன் உளங் களித்தான்!! வானத்தை, அண்ணாந்து பார்த்தான்—அலெக்சாண்டரின் வாய் முணுமுணுத்தது:—

"உலகத்தை வெல்லவேண்டுமென விரும்புகிறேன்; ஆனால் என்னையே நான் வெல்ல முடிய வில்லை! அலைகடல் கிழிக்கும் அலெக்சாண்டர், ஆசை அலைகளுக்கு அடிமையானான் என்பதைக் கேட்டால் உலகம் சிரிக்கும். கன்னியின் கண்களுக்குக் காவலன் மருண்டேன்! கைபிடித்த வாளையும், துடிக்கும் வீரர்களையும், வெற்றி நினைவுகளையும் மறந்தேன் — வேல் விழிக்காக அலைந்தேன். மலைகள், மருளும் எனக்கு! மாமன்னர்கள் மண்டியிடுகின்றனர்! தலைகள் உருள்வதுண்டு, என் குரல் கேட்டு. கடல், மண், காடு, மேடு எல்லாம் எனக்குத் தூசு! என் கர்ஜனைகேட்டு, உலகமே அலறுகிறது. 'மாவீரா! மாவீரா!' என்று மண்டியிடும் வீரத் தளபதிகள், என்னைச் சுற்றி ஏராளம். இவ்வளவு பெரிய வீரன், நான்! வெற்றிக்காகப் போராடும் மாவீரன், நான்!! எவருக்கும் அஞ்சியதில்லை—எதிர்த்தோரை முறியடிக்காது விட்டதுமில்லை. வெற்றி! வெற்றி!!—என்றே வீரமுழக்கம் செய்திருக்கிறேன். ஆனால், இன்று? ஒரு சாதாரணக் கைதியின்முன் தோல்வியுற்றேன்! கன்னிப்பெண் ஒருத்தியின் கண் வீச்சு, என்னை வீழ்த்திற்று—வெற்றி பெற்றேனில்லை! ஏழை ஓவியன், என்னைத் தோற்கடித்து வாகை சூடிவிட்டான். தலைவணங்கத் தளபதிகளும், மண்டியிட மன்னாதி மன்னர்களும், பாய்ந்தோட புரவிப் படையும், அணிந்து மகிழ ஆபரணங்களும், என்னிடம்உண்டு. எனினும், தோற்றேன்! காதல் போட்டியில், தோல்வியுற்றுப் போனேன்!!" என்று, சோகத்தோடு சொல்லிக்கொண்டான். எதிரே, ஓவியனும் கம்பாஸ்பியும், கை கோர்த்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தனர். ஒரு முறை, நிம்மதியான கண்களோடு, அவர்களைப் பார்த்தான். பெருமூச்சு ஒன்று, காற்றோடு கலந்தது. இடிமுழக்கமெனக் கூவினான். "தளபதிகாள்! கொட்டுங்கள் முரசு! முழக்குக சங்கநாதம்! திரட்டுங்கள் படைவீரர்களை! பாய்வோம், பாரசீகத்தின் மீது!!"

புரவிகளின் குளம்படிச் சப்தம்! முரசுகளின் முழக்கம்! வீரர்களின் சங்கநாதம்!!—இவைகளுடன் புறப்பட்டான், அலெக்சாண்டர், ஏதன்சைவிட்டு. அவன் காதுகளில், யாரோ "காதல்! காதல்!! அது ஓர் கண்கவர் வர்ணம். வீரம்போதாது அதைக் கையாள; இருதயம் வேண்டும்" என்று கூவுவதுபோல் ஒலித்தது!

['ஜான்லிலி' எனும் ஆங்கிலக் கவிஞரின் நாடகம் ஒன்றைத் தழுவியது.]

நடக்க இருப்பவை

ஈரோடு: 9-11-52ல் செங்குந்தர் உயர்நிலைப் பள்ளிக்கு அருகிலுள்ள மைதானத்தில் தோழர் ஈ. வி. கே. சம்பத் தலைமையில் மு. கருணாநிதி பேசுவார்.

1-ம் பக்க தொடர்ச்சி

போதுமே—திட்டங்கள் தீட்டித் தாலாமே. அதை விட்டு விட்டு, இரதகஜதுரகபதாதிகளைத் திரட்டிக் கொண்டு, எதிரியின் நாட்டின் மீது படையெடுக்கப் போவதுபோல, "எல்லோரும் ஒத்துழையுங்கள்! பேதாபேதமின்றி எனது அறப் போருக்குஆசிகூறுங்கள்!!" என்று, கேட்பது, எதற்காக? சட்டசபையைக் கூட்டி, அங்கே தனது யோசனைக்கு, ஆதரவு திரட்ட வேண்டிய தன் அவசியம் யாது? அவர், சென்னை மாநில அமைச்சர்! அவரது பிரஜைகளான நெசவாளர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக, நெசவாளர் தலைவர்கள்நீண்டநாட்களாய் வலியுறுத்தி வந்த "யோசனை"யை ஏற்றுக்கொண்டார். அந்த யோசனையை அமுலாக்க வேண்டியவர், சட்டசபையில் விளக்கமும் வியாக்யானமும் தரவேண்டியதேன்? கைத்தறியாளருக்கென கரை போட்ட வேஷ்டிகளையும், புடவைகளையும் ஒதுக்க வேண்டும். ஆலைகளை, இவைகளை உற்பத்தி செய்யாமல், தடுக்க வேண்டும் என்று, சட்டசபையில் தீர்மானம் ஒன்று கொண்டு வந்து, அதை டில்லிக்கு, அனுப்பிவைக்க வேண்டிய அவசியத்துக்கு, ஆச்சாரியார் வந்ததேன்! ஆச்சாரியார், எல்லோரையும் போன்றவரல்ல. இந்த உபகண்டத்தில் கவர்னர் ஜனரலாகயிருந்தவர்! சப்ளைமந்திரியாகவுமிருந்தவர்! செல்வாக்குமிக்கவர்! அத்தகைய 'பெரிய மனிதர்', ஒரு அரைமணிநேரம் தன்னுடைய 'யோசனை'யை விளக்கி, டில்லியாரது அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம். "இந்த உதவியைச் செய்யுங்கள்! அப்போதுதான் சென்னை மாகாண நிலைமையைச் சீர்படுத்த முடியும்" என்று ஒருவருக்கொருவர் விவாதித்து, முடிவு செய்து கொள்ள, ஆச்சாரியாருக்கு விசேஷ வசதிகள் உண்டு. எனினும், ஏன் இவர், இந்த விஷயத்தை, சட்டசபை முன்வைத்து, சண்டப்பிரசண்டமாகச் சொற்பொழிவாற்றிக் காட்டி, தீர்மானம் செய்து, டில்லியினருக்கு அனுப்பிவைக்க வேண்டும்?

ஒவ்வொரு விஷயத்துக்கும், இவ்விதமா, செய்கிறார், அன்பர் ஆச்சாரியார்?—இல்லையே! இந்தப் பிரச்னையில் மட்டும், இவ்வளவு தூரம், சிரத்தை செலுத்த வேண்டிய அவசியம் என்ன வந்தது?

> தனதுமக்களுக்கு வேண்டிய நன்மைகளைச்செய்யும் உரிமை, தம்மிடம் இல்லாமலிருப்பதே தவறு—

இதை, நாம் விளக்க ஆரம்பித்தால் 'பிரிவினை கேட்கிறான்' என்று,வாயடைக்க முயல்வர். எனவே, அதைக் கூட விட்டுவிடுவோம்,

> "தம்முடைய சர்க்கார், எல்லோரும் ஓர்குலம், இந்திய மாதா," என்று புகழ்ந்து திபாடும், தேசிய வீரர்கள், தமது மத்திய சர்க்காரிடம் பேசி, முடிவுசெய்து கொள்வதற்குப் பதில், சட்டசபையில் தீர்மானம் செய்து அனுப்ப வேண்டிய அவசியம் என்ன?

இந்தக்கேள்வியை, நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'ஒரே சர்க்கார் எமது,' மாகாணத்திலிருப்போரும், டில்லியிலிருப்போரும் ஆலிங்கனம் செய்து கொள்கிறார்கள். "நேருவும் ஆச்சாரியாரும் அருமையான சிநேகிதர்கள்! சென்னைக்கு வந்த நேருவுக்கு ஆச்சாரியார் வீட்டிலிருந்து 'தக்காளிரசம்' கொண்டு போய்க் கொடுத்தனர். தெரியுமா?" என்று பெருமை பேசிக்கொள்கிறார்கள். "டில்லிக்கும் சென்னை சர்க்கார் மாளிகைக்கும், உடனுக்குடன் 'இரகசியம்' பேசிக்கொள்ள, டெலிபோன் வசதி உண்டுதெரியுமோ!" என்றும், தெரிவிக்கிறார்கள். இவ்வளவு வசதிகள் பெற்றிருக்கும் காங்கிரசார், கைத்தறி விஷயத்தில் மட்டும், கடல்மடை திறந்தாற்போல் கர்ஜனை எழுப்ப வேண்டிய அவசியமும், சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலைக்கும் வந்தேன்?

ஆச்சாரியார் கூறுகிறார், 'இந்த ராஜ்யத்திலுள்ள பொதுமக்களின் குரலை, இத்தீர்மானத்தின் மூலம் இந்திய சர்க்காருக்குக் காண்பிக்க வேண்டும்" என்பதாக. கம்யூனிஸ்டுக் கட்சித் தோழர்கள் கூறலாம், இவ்விதம்! நாம் முழக்கமிடலாம், இதுபோல! ஆனால் ஆச்சாரியாருமா, பேசுவது? அவர் காங்கிரஸ்காரராயிற்றே! அவருக்கும் டில்லிக்கும் தகராறென்றோ, இருவரும் எதிர்க் கட்சியினரென்றோ, இருக்குமானால் இவ்விதம் பிரகடனம் செய்யலாம்! ஆனால் இருவரும் ஒரே கட்சியினர்—எனினும், சட்டசபையில், இவ்விதம் பேசியிருக்கிறார்.

"டில்லி நம் பிரச்னைகளைக் கவனிப்பதில்லை!"

"டில்லி அலட்சியம் காட்டுகிறது"

"நம்மிடம் அதிகாரம் எதுவும் இல்லை"

இவ்விதம் நாம் சொன்னால், ஆச்சாரியார் உள்பட அனைவரும் சீறுவர். துவேஷி! துரோகி! தூண்டாட வேண்டுமாமே! — என்று சொல்லம்பு பாய்ச்சுவர்! 'டில்லி வேறு—சென்னை வேறு' என்று பிரித்துப் பேசுவதைப் பாரீர் என்று பாய்வர்! ஆனால், ஆச்சாரியார் கூறுகிறார்,—

> "இவ்விதம் பொதுமக்கள் தீர்ப்பை இந்திய சர்க்காருக்குத் தெரிவித்தால், பூரண அதிகாரத்தோடிருக்கும் அவர்களை, ஏற்கும்படிச் செய்யலாம்"

இவ்விதம், சட்டசபையில், தீர்மானம் செய்து, முழக்கமிட்டு அனுப்பினால், "பூரண அதிகாரத்தோடிருக்கும்" டில்லியின் கவனத்தைத் திருப்பலாமாம்!

'திராவிட நாடு திராவிடருக்கே' ஆக, மக்கள் குரலை ஒலிக்கச் செய்தால், டில்லி பணியும் என்று நாம் கூறுவோம். அதேபோல, ஆச்சாரியார் தெரிவிக்கிறார். கைத்தறித் துணிகளுக்கான நியாயத்தைப் பெற்றுத் தர, இவ்வளவுதூரம் சங்கடப்படும்படியான நிலை, ஆச்சாரியாருக்கேற்பட்டது எவ்விதம்? ரேஷன் கண்ட்ரோலை ரத்து செய்தார், அப்போது ஏற்படவில்லை சங்கடம்! உணவு மந்திரிகள் மாநாட்டில் அதிக உணவு வேண்டுமென்றார், மாகாணத்துக்கு — அதைத் துணிவோடுதான் வலியுறுத்தினார்! போதிய பணம் வேண்டும் என்று தயங்காதுதான் கேட்டார், டில்லியினரை! அத்தகைய ஆச்சாரியார், டில்லியில் வாழும் அனைவராலும் 'மதியூகி' எனப் போற்றப்படும் ஆச்சாரியார், கைத்தறிவாளர் பிரச்னை குறித்து தெளிவாக வாதிடும் திறமை உண்டு எனத் தெரிவிக்கும் ஆச்சாரியார், இந்தப் பிரச்னையில் மட்டும்,

> சட்டசபையைக் கூட்டி,
> தீர்மானத்தை நிறைவேற்றி,
> பொதுஜன சக்தியைத் திரட்டி

டில்லியினரைக் கேட்டுக்கொள்ளும் நிலைக்கு வர நேர்ந்தது ஏன் என்பதை, நாம் நன்றாகச் சிந்திக்கவேண்டும். தீர்மான ரூபத்தில், கைத்தறியாளர் சம்பந்தமாக, சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் விஷயம் ஒன்றும் பிரமாதமானதல்ல. நீண்ட நாட்களாக, நெசவாளர் தலைவர்கள் கேட்டுக்கொண்டிருப்பதுதான்.

> புடவைகள்
> வேட்டிகள் — அதிலும் கரை போட்டவை மட்டும்!

இந்த இரண்டு ரகங்களையும், நெசவாளர்களுக்கு மட்டும் ஒதுக்கித் தரவேண்டும் என்பதுதான். "இந்த ரகங்களை ஆலைகள் உற்பத்தி செய்யக்கூடாது; தடைசெய்யப்படவேண்டும்" என்பதும், அத்தீர்மானத்திலிருக்கிறது. இந்த வரிகளுக்காகவே இவ்வளவு தூரம், ஆச்சாரியார் வக்காலத்து வாங்குவதும், முழக்கமிடுவதும்.

ஆலைகள் விஷயத்தில், குறுக்கிடுகிறார்! இதனை, ஆலையூரார், எவ்விதம் சகிப்பர்? ஆகவே, அதற்கு, பொதுஜன சக்தியைத் திரட்டுகிறேன், என்கிறார்.

> வடநாடு, ஆலையூர்!
> தெற்கு, அவதியூர்!!

இவ்விதம் தெரிவித்து,

> டில்லி—சுரண்ட,
> தெற்கு—மார்க்கெட்

என்று கூறினால், நம்மீது, சீறுவோர், அந்த உண்மையை, அறிந்தோ அறியாமலோ, கைத்தறியாளர் பிரச்னையின்போது, கூற வேண்டியவராகியிருக்கின்றனர். கூறுகிறார், ஆச்சாரியார்:—

> "கிழக்கு இந்தியக் கம்பெனியின் காலத்திலிருந்து சமீப காலம்வரை, இந்தியாவைத் தமது பொருள்களை விற்கும் இடமாகவே, பிரிட்டிஷார் நடத்திவந்தனர். அதே கொள்கையைத்தான் இந்தியாவிலிருக்கும் ஆலைகளும் அவைகளின் நண்பர்களும் கடைப்பிடிக்க நினைக்கிறார்கள்."

மான்செஸ்டர்! லங்காஷயர்!!— முன்பு. பம்பாய்! ஆமதாபாத்!!— இப்போது. வெள்ளையன், நம்மைச் சுரண்டினன் — முன்பு. மஞ்சள் நிறத்தான் சுரண்டுகிறான் — இப்போது. இதனையே, அன்பர், ஆச்சாரியார், வெளியிடுகிறார், அவர், மாகாண முதலமைச்சர்! அவர் கூறுகிறார், "ஆலையூர், நமது நாட்டை 'மார்க்கெட்'டாகவே வைத்திருக்க விரும்புகிறது" என்பதாக. காலம் கடந்துவந்த, ஞானம், அவருக்கு! ஆனாலும், களிப்பெய்துகிறோம்!! இதே விஷயத்தை 29—9—46-ந் தேதிய நமது இதழில், நாம் தீட்டியிருக்கிறோம். ஆச்சாரியார், இன்று கைத்தறியாளர்களுக்காக, வாதாடக்கிளம்பும் காரணத்தால் பேற்படி ஆதாரங்களோடு புறப்படுகிறார். ஆனால் நாம், 1946-லேயே கூறியது இது:-

> "ஒரு காலத்தில் இங்கிலாந்தில் அன்னிய நாட்டுத் துணி கட்டினால் 30-பவுன் அபராதம் விதிக்கச் சட்டம் இயற்றினார்களாம்—அவர்களுடைய நெசவுத் தொழிலை விருத்தி செய்ய. இன்று நம்மில் 100-க்கு 60, 70-பேர் பம்பாய், ஆமதாபாத் போன்ற வெளிமாகாணத் துணிகளை அணிந்திருப்பதைப் பார்க்கிறோம். பெண்களும், ஆமதாபாத் சேலைகளையே கட்டுகிறார்கள்- ஆமதாபாத் முதலிய வெளிநாட்டு, அதாவது திராவிடநாடு அல்லாத நாட்டுத்துணிகளை நாம் தடுத்துவிட்டால் நமது கைத்தொழில் வளர்ச்சி அடையும். கைத்தறி நெசவாளர்களின் துன்பம், வறுமை, கஷ்டம் ஒழிந்துபோய் விடும்."

ஆறாண்டுகளுக்கு முன்பே, நாம் இதனைச் சொன்னோம்! இன்றும் இதன் காரணமாகவே, வடநாட்டை "ஆலையூர்" எனும் பெயரால் அழைத்துவருகிறோம்.

புடவை, வேட்டி இந்த இரண்டு ரகங்களையும், கைத்தறிக்கு ஒதுக்கித்தருவதென்பது, ஆலையரசர்களுக்குப் பெரிய பிரச்னையல்ல.

ஏனெனில், இந்த இரண்டு ரகங்கள் தவிர, ஆலைகள் தயாரிக்கும் வகைகளிருக்கின்றனவே, அவை அனந்தம்.

'பேண்டேஜ்' லாங்க்ளாத்
கிளாத் மேட்டி
பெட்ஷீட்டுகள் [illegible]
ஜமக்காளங்கள் மஸ்லின்
[illegible]
காலிகோ [illegible] துணி
கான்வாஸ் பாப்லின்
சால்வைகள் ரேயான்
துப்பட்டாக்கள் [illegible]
டிரில்கள் தையல் நூல்
வடிகட்டும் ஷர்ட்டிங்ஸ்
துணி ஸ்டாண்டர்ட்
பிளானல் கிளாத்
காடா [illegible]
ஜார்ஜட் [illegible]
கைக்குட்டைகள் டேபிள் துணி
சூடிங்ஸ் டபேட்டா
குடைத் துணி 'டெண்டு'
வெல்வெட் கிளாத்
வாயில் டவல்கள்
லினன் ட்வில்கள்
கோடிட்டவை

இத்தனை வகைகளையும், இன்னும் பலவிதமான தினுசுகளையும், ஆலைகள் தயாரிக்கின்றன. சென்னை சர்க்காரின் தீர்மானப்படி, மல் உற்பத்தி செய்யும் உரிமையும் உண்டு, ஆலைகளுக்கு. இருந்தும், ஆலையூர், மிரட்டுகிறது, ஆச்சாரியாரை! டில்லிக்கு 'தீர்மானம்' கொண்டுபோகிறார், ஆச்சாரியார்!!

கைத்தறியாளரின் கண்ணீர் துடைக்கும் பணியில், வடவருக்கு சிரத்தை யில்லை என்பதை, நாம் கண்டு வருகிறோம்.

அதற்கு அனுசரணையாக டில்லி ஆட்சிபீடமும், இருந்துவருகிறது.

இப்போது என்றல்ல, ஆதிமுதல் சுதேசி இயக்கத்தில் நம்மவர் தீவிரமாக ஈடுபட்ட [illegible] ஷோலாப்பூரிலும், [illegible] லும் ஆலைகள் [illegible] உண்மையை நாம் [illegible] யாது.

"ஆடு ராட்டே! [illegible] ராட்டே!" என்று நாம் பாடிக் கொண்டிருந்த நேரத்தில், அங்குள்ளோர் ஆலைகளைக் கட்டிக்கொண்டிருந்தார்கள்—அவ்விதம் ஆலைகளை அமைத்துக் கொண்டிருந்தோரே, தேசிய இயக்கத்துக்கு, பண உதவியும் செய்துகொண்டிருந்தார்கள்.

> நாம் தாழ்ந்தோம்!
> அவர்கள் உயர்ந்தார்கள்!!
> நாம் வாடுகிறோம்!
> அவர்கள் கேலி செய்கிறார்கள்!!
> கெஞ்சுகிறோம்!
> கண்டிக்கிறார்கள்!!

இந்த உண்மையை, நாம் மறந்துவிடக்கூடாது. நாம் கூறினால், கண்டிக்கும், தேசிய நண்பர்கள் மறந்துவிடக்கூடாது.

"நீ என்னப்பா! டில்லியைத் தூஷித்தே பேசுகிறாய், அவர்களுக்கு நெசவாளர் பற்றிக் கவலையில்லையென்கிறாயே. உண்மையா இது? மில் துணியில் கஜம் ஒன்றுக்கு [illegible] காலணா வீதம் வரிபோட்டு நெசவாளரின் நிவாரணத்துக்குத் தருகிறோம், என்று டில்லியார் தெரிவித்திருக்கிறார்கள். தெரியுமோ?" என்று சில நண்பர்கள், கேட்க நினைக்கலாம். அவர்களுக்கும், ஆச்சாரியார் பதில் தருகிறார்:—

> "இவ்விதம் 'செஸ்' தருவதால் சென்னைக்கு ஒரு கோடி கிடைக்கலாம். இதை வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், இது [illegible]

(2-ம் பக்கம் பார்க்க)

காண விரையுங்கள்!
காஞ்சி
கண்ணன் டாக்கீஸ்
"பராசக்தி"
சனி—ஞாயிறு மூன்று [illegible]

தேனி வழக்கு

தேனி கலவர வழக்கு இன்று மதுரை அடிஷனல் முதல் வகுப்பு மாஜிட்ரேட் அவர்களின் பெரியகுளம் முகாமில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் கோர்ட்டில் ஆஜராகியிருந்தார்கள். தேனி தி. மு. க. தோழர் அ. தேவராசன் மற்றும் சாட்சிகளும் தி. மு. கழக தோழர்கள் சார்பில் மதுரை வக்கீல் பி. எஸ். உஸ்மான் பி. ஏ. பி. எல்., காந்திதாஸ் பி. ஏ. பி. எல். ஆகிய இரண்டு பேரும் காங்கிரஸ்காரர்கள் சார்பில் பெரியகுளம் வக்கீல் சேதுராவ் பி. ஏ. பி. எல்., ஆஜராகியிருந்தார்கள். முதல் சாட்சியாக சக்கம்பட்டி தோழர் ராசு அவர்களை சத்தியமாக சொல்லுகிறேன் என்று சொல்லு என்று திரு. மாஜிட்ரேட் அவர்கள் கேட்டார். ராசு அவர்கள் உண்மையாகச் சொல்லுகிறேன் என்று கூறினர். எதிரி தரப்பு வக்கீல் சேதுராவ் சத்தியமாய் சொல்லுகிறேன் என்று ஏன் கூறவில்லை என்று கேட்டார். ராசு அவர்கள் சத்தியமாய் என்று சொல்ல பிரியப்படவில்லை என்று கூறினார். உடனே திரு. மாஜிட்ரேட் அவர்கள் குறுக்கிட்டு சத்தியம் என்பதும் உண்மை என்பதும் ஒன்றுதான். ஆகவே வழக்கின் விபரங்களை மட்டும் கிராஸ் செய்யவும் என்று கூறினார். அதன்பின் வழக்கு நடைபெற்றது. இரண்டாவது சாட்சியாக சாக்கம்பட்டி ஆறுமுகம் என்பவரும் உண்மையாய் என்று கூறினார். மூன்றுவதாக 4—6—51 வரை தேனி நகர் காங்கிரஸ் கமிட்டி தலைவராய் இருந்தவரும் 4—7—51ல் நடைபெறுவதாய் விளம்பரப்படுத்தப்பட்ட காங்கிரஸ் கூட்டத்திற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்று மறுப்பு நோட்டீஸ் கொடுத்தவருமான தேனி வீ. வெ. குருசாமி நாய்க்கரை சுமார் இரண்டரை மணி நேரம் விசாரிக்கப்பட்டு வழக்கு மீண்டும் 15—11—52ல் ஒத்தி வைக்கப்பட்டது.

✫

பம்பாயில் தி. மு. க. ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

நவம்பர் 15, 16 சனி ஞாயிறுகளில்
மாலை 5-30 மணிக்கு
தாராவி முட்டிவாடி மைதானத்தில்
மு. கருணாநிதி, என். வி. நடராசன்
ஆகியோர் பேசுவர்.

முழக்கம்

மயிலை (சென்னை) :— 44-வது வட்ட தி. மு. க. கிளையின் அலுவலகத்தை 2, அரங்கநாதபுரம் தெருவில் 2—11—52 அன்று கே. கோவிந்தசாமி திறந்துவைத்தார். N. V. நடராசன், K. M. கண்ணபிரான், ஜே முனுசாமி பேசினர்.

திண்டுக்கல்: 1—11—52, A. சுப்பையா தலைமையில் சென்னை கழக வீரர் பாண்டியனைக் காங்கிரஸ் வெறியர்கள் கொலை செய்ததைக் கண்டித்து சர்வகட்சிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. S. சமதர்மம், இல: வீரராசன், P. A. தங்கராசன், A. M. ஆசன் பேசினர்.

சென்னிமலை: 28–10–52 மாலை கொமாரபாளையம் S. S. M. சுப்ரமணியம் தலைமையில் மு. கருணாநிதி E. V. K. சம்பத், கண்ணதாசன் ஆகியோர் பேசினர். இரவு 10-மணிக்குமேல் தூத்துக்குடி தோழர் G. அப்பாசாமியின் 'மாதிரம் என்பது தந்திரம்' என்னும் ஜால வேடிக்கை நடைபெற்றது.

நெசவாளர் மறியல்

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சுமார் 100 நெசவாளர்கள் சட்டசபையில் மறியல் செய்வதற்காக கால்நடையாக வருகிறார்கள். வரும் வழியில் தி. மு. க. கிளைக் கழகத் தோழர்களும் நெசவாளர்களும் ஆதரவு காட்டும்படியும், இயன்ற உதவி அளிக்குமாறும் வேண்டிக்கொள்கிறேன் என ஸ்ரீவில்லிபுத்தூர் தி.மு.க. செயலாளர் கோ. பெருமாள் கேட்டுக்கொள்கிறார்.

'அகிம்சா' அட்டகாசம்!

சென்னை மேற்கு தியாகராய நகரின் நடுபாகத்திலிருக்கும் 'சேரி' யென வழங்கும் பகுதியில் கடந்த ஓராண்டுகாலமாக பகுத்தறிவுத் தோழமைக் கழகம், மக்களிடையில் பணியாற்றி வருகிறது. முதியோர் கல்வி, படிப்பகம் முதலான நற்பணிகளைச் செய்து வரும் மேற்படிக் கழகத்தின் ஆண்டுவிழா 11–10–52ல் தோழர் கே. விநாயகம் எம்.எல்.ஏ., எம். சி. தலைமையில் தோழர்கள் கண்ணதாசன், பூங்கோதை, எம். கன்னியப்பன் எம். சி. ஆகியோர் சொற்பொழிவுடன் நடைபெற்றது. இதையொட்டி, வேண்டுமென்றே மேற்படி கழக வளர்ச்சியினைக்கண்டு சகிக்காத தேசியத் தோழர்கள், பகுத்தறிவுத் தோழமைக் கழகத் தோழர்கள் மீது போலீசாரிடம் புகார் செய்தனர்—வீணை குற்றச் சாட்டுகளுடன். இதனால் 12–10–52 அன்று மேற்படி கழகத்துக்குப் போலீஸ்படைவந்து, கழக உறுப்பினர்கள் முப்பதுபேரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச்சென்று 10 பேர்மீது வழக்குப்பதிவு செய்துகொண்டு ஜாமீனில் விடுவித்துள்ளார்கள். வழக்கு நடைபெற்று வருகிறது.

பாராட்டு

மதுரகவி வி. வே. முருகேசபாகவதர் அவர்களின் பிறந்த நாள் 21—10—52 அன்று பெரம்பூரில் திரு. வி. க., மதுரகவி, ஆகியோருக்கு மாகாண கவுரவ நீதிபதி சி. மதுரைப்பிள்ளை, அண்ணமலை, வி. பாலகிருஷ்ணன் மாலை சூட்டினர். பொன்னேரி ராகவன், பொன்னுடையோர்த்தினர். திருவூர் முனுசாமி, சாமிசண்முகாநந்தா, அண்ணமலை, ஜார்ஜ் பாராட்டுரை வழங்கினர்.

✶

மாவட்டத் தேர்தல்

முடிவுகள்

✶

தி. மு. க. மாவட்டக்கிளைகளின் நிர்வாகிகளுக்கான, முதல் பிரிவுத் தேர்தல்கள் 2—11—52 ஞாயிற்றுக்கிழமை யன்று 4 மாவட்டங்களில் நடந்தேறியிருக்கின்றன.

சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டக்கிளை நிர்வாகிகளுக்கான தேர்தல், சேலம், செவ்வாய்பேட்டை வாசகசாலைத் தெருவிலுள்ள தி. மு. க. கட்டிடத்தில் 2—11—52–ம் நாள், பகல் 3–30 மணிக்கு, தோழர். இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்: ஜி. பி. சோமசுந்தரம்
துணைச்செயலாளர்: ப. ராமலிங்கம்
பொருளாளர்: பி.எம். குப்புசாமி

பொதுக்குழுக்கானபிரதிநிதிகள்: ஜி. பி. சோமசுந்தரம், ப. கண்ணன் இரா. ஜெகநாதன், பி. ஆர். சோமசுந்தரம், பி. ராமலிங்கம், இரா. தாண்டவன், பி. எம். குப்புசாமி, ரா. வரதராசன், கே. ஏ. நடராசன், ஈ. ஆர். கிருஷ்ணன்.

சென்னை மாவட்டம்

சென்னை, ராயபுரம் தலைமை நிலையத்தில் 2—11—52ம் நாள் காலை 10-மணிக்கு தோழர் போளூர் சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்: கே. எம். கண்ணபிரான், துணை செய: க. சிதம்பரம், பொரு: ஏ. கண்ணப்பன், பொதுக்குழுவுக்கான பிரதிநிதிகள்:

கே. கோவிந்தசாமி, இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், அருண்மொழி, கே. எம். கண்ணபிரான், சத்தியவாணிமுத்து, மணிமொழியார், ஆர். பாண்டியன், கா. அண்ணமலை, ஏ. கே. சாமி, சி. வி. ராசன், அ. பொ. அரசு.

மதுரை மாவட்டம்

சோழவந்தான் பனகல் இல்லத்தில் 2—11—52ம் நாள் மாலை 3-மணிக்கு தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்: எஸ். வி. தொந்தி, துணைச் செய: எம். அய்யாச்சாமி, பொரு: எஸ். கிருஷ்ணசாமி.

பொதுக்குழுவுக்கான பிரதிநிதிகள்:

கு. ப. ம. தர்மன், கே. எஸ். ராசமான், தா. ஆவுடையப்பன், கே. வி. விக்கிரமாதித்தராசன், எம். எஸ். பால்ராசன், எஸ். வி. தொந்தி, கே. தங்கவேல், கே. நடராசன், வெ. தியாகராசன், எம். எஸ். பழனியப்பன்.

திருச்சி மாவட்டம்

திருச்சி: 2–11–52 ஞாயிறு காலை 10 மணிக்கு மாவட்ட தி. மு. கழக பணிமனையில், தோழர் மு. கருணாநிதி தலைமையில் துவங்கியது. புது நிர்வாகிகள்:—செயலாளர் எ.பி. தர்மலிங்கம், துணைச் செயலாளர்: ஜி. பராங்குசம் பொருளாளர்: டி. பி. அழகமுத்து, பொதுக்குழு உறுப்பினர்கள்: இராசா—குளித்தலை, ஞானமுத்து — புதுக்கோட்டை, இளமுருகு பொற்செல்வி - பன்னுங்கொம்பு, கே. எ. முருகேசன்-கரூர், முத்துக் கருப்பன்-தாத்தையங்கார் பேட்டை, செல்லப்பா-அரியலூர், எம். எஸ். மணி - திருச்சி நகரம், எ. பி. தர்மலிங்கம்-லால்குடி, ஜி. பராங்குசம்-பொன்மலை, டி. பி. அழகமுத்து-துறையூர். அனைவரும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

❀

கழகவீரர் பாண்டியனை, காங்கிரஸ் வெறித்தனம் இரையாக்கியதைக் கண்டித்தும், அரசியலாரிடம் நீதி கோரியும் கீழ்க்கண்ட கழகங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன:

நெல்லிக்குப்பம் (தெ. ஆ.)
கீரனூர் (திரு)
திண்டுக்கல் (திரு)
குடியேற்றம் (வ. ஆ.)
சேலம்
மயிலை (சென்னை)

தி. மு. க. மாவட்டக் கிளை தேர்தல்கள்

கீழ்க்கண்ட மாவட்டக் கிளைகளின் தேர்தல்கள் கீழ்க்கண்ட விபரப்படி நடைபெறும். தலைமை நிலையத்தில் பதிவு செய்துகொண்ட கிளைகளுக்குப் 'பிரதிநிதி உரிமைச் சீட்டு' தலைமை நிலையத்திலிருந்து அனுப்பிவைக்கப்பெறும். கிளைக் கழகப் பிரதிநிதிகள், உரிமைச் சீட்டோடும் பாக்கியுள்ள ரசீதுகளையும், பாக்கியுள்ள சந்தா தொகையையும் உடன் எடுத்துக்கொண்டு சென்று மாவட்டக் கழகத் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டும்.

மாவட்டம்	தேர்தல் நாள்	இடம்	மணி	தேர்தல் அதிகாரி
இராமனுதபுரம்	9—11—52	நாடார் பரிபாலன சங்கக் கட்டிடம் விருதுநகர்.	மாலை 4 மணி	என். வி. நடராசன்
திருநெல்வேலி	9—11—52	தி, மு. க. மேடை திருநெல்வேலி சந்திப்பு	காலை 10 மணி	என். எஸ். இளங்கோ
தஞ்சை	16—11—52	அருளானந்தசாமி நாடார் தோட்டம், தஞ்சை.	மாலை 3 மணி	சி. பி. சிற்றரசு

குறிப்பு:—செங்கற்பட்டு, வ. ஆற்காடு, தெ. ஆற்காடு, கோவை மாவட்டங்களின் தேர்தல்கள் 23—11—52 ஞாயிறன்று நடைபெறும் இடம், நேரம் பின்னல் அறிவிக்கப்படும்.

இரா. நெடுஞ்செழியன்,
பொறுப்பாளர், தலைமை நிலையம்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.